**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.65
https://ngmtamil.in/

# திருக்குறள் உணர்த்தும் அருள்

**முனைவர் மோ. கிறிஸ்டி,**
உதவிப் பேராசிரியர், தமிழ் ஆய்வு துறை, பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சி 17, 9677546890

**அருளுடைமை**

**நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றல்**
**தேரினும் அஃதே துணை (குறள் எண்:242)**

நல்லாற்றான் நாடி : நல்ல வழி என்று சொல்லப்படும் அறநெறியை ஆராய்ந்து.

அருளாள்க:- அருளுடையவர்களாக ஆகவேண்டும். கருணையுடன் செயல்பட வேண்டும்.

பல்லாற்றல் தேரினும் அஃதே துணை:- பல வழிகளாலும் ஆராய்ந்து கண்டாலும் எது சிறந்தது என்றாலும், அருளாகிய பண்பே நமக்கு நிலையான துணையாகும்.

இந்தக் குறளானது, அருள் அல்லது கருணையின் முக்கியத்துவத்தையும் எந்த சூழ்நிலையிலும் அருளோடு இருப்பது தான் சிறந்த வழி என்றும் உணர்த்துகின்றது. இந்தக் குறளை விரிவாக ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வுச் சுருக்கம்**

சுயநலமில்லாமல் பிறர் நலத்தினை காக்க வேண்டும் என்பதில் நம் தமிழர்களுக்கு நிகர் தமிழர்களே முன்னோடியாக விளங்கினார்கள். மனுநீதிச் சோழன், ஒரு பசுவின் கன்றிற்காக தன் மகனையே தண்டித்தவன். சிபிச் சக்கரவர்த்தி புறாவுக்காக தன் உடலையே தானம் செய்ததும், பாரி மன்னன் முல்லைக்காகத் தேர் கொடுத்ததும், பேகன் என்ற மன்னன் மயிலிற்காக போர்வை அளித்ததும் வரலாற்றில் மாறாமல் இருந்து வந்த தமிழர்களின் கருணையாகும். தன்னைத் தாக்கிய பகைவர்களுக்கு கூட துன்பம் விளைவிக்காது போராட்டத்தினை வென்ற அகிம்சைவாதி மகாத்மா காந்தி. பிற உயிர்களுக்கு சேவை செய்வதற்கான தன் வாழ்நாளையே அர்ப்பணித்த அன்னை தெரசா. தென்னாப்பிரிக்காவில் நிறவெறி அமைப்பை முடிவுக்கு கொண்டு வரப் போராடிய நெல்சன் மண்டேலா என மனிதநேயம் காத்த மனிதர்கள் பட்டியல் நீள்கிறது.

**திறவுச்சொற்கள்:** அருள், கருணை, நல்வழி, மனித நேயம், அன்பு.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**முன்னுரை**

ஒரு மதம் கூறிய கருத்துக்களை பிற மதங்கள் ஏற்றுக் கொள்வது இல்லை. ஆயினும் அனைத்து மதங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்களில் ஒன்றுதான் அருளுடைமை என்ற மனிதநேயம். "உன் உயிரைப் போல் பிற உயிரையும் நேசி" என்கிற மனிதநேய கருத்தை அனைத்து சமயங்களும் கூறுகிறது. இதனையே வள்ளுவர்,

**"நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றல்**

**தேரினும் அஃதே துணை. (குறள் எண்:242)** என்றார்.

வள்ளுவர் காலத்தில் சமணம், புத்தம், சைவம், வைணவம் என பல சமயங்கள் இருந்த போதிலும், அருளை மனதில் வைத்துக்கொண்டு வாழுங்கள் என அறிவுறுத்துகின்றார். எச்செயலை செய்தாலும் மனிதநேயத்துடனும் மனிதாபிமானத்தோடும் நடப்பதே சிறந்தது என்கிறார்.

**அருளும் – உயிரும்**

அருளுடைமை என்பது அறம் ,கருணை, இரக்கம் போன்ற நல்ல பண்புகளின் மேன்மையை விளக்குவது ஆகும். மேலும், எல்லா உயிர்களிடத்திலும் கருணையோடும் அன்புடனும் நடந்து கொள்வது ஆகும். இது ஒரு சிறந்த குணமாகும். இது வீடுபேற்றுக்கும் அடிப்படையாகும் என்று திருக்குறள் கூறுகிறது.

இது வெறும் அன்பு என்பதை விட அதன் முதிர்ச்சி வடிவமாகும்

அருள் + உடைமை= அருளுடைமை

இதில் அருள் என்பது, கருணை, அன்பு இரக்கம், உதவி செய்தல், தர்ம சிந்தனை கொண்டிருத்தல். உடைமை என்பது பெற்றெடுத்தல் அல்லது கொண்டிருத்தல் என்பதை குறிக்கும். இது ஒரு பரந்த இரக்க குணம் ஆகும். நமக்கு தொடர்பு உடையவர்களிடம் மட்டுமல்லாமல், தொடர்பில்லாத பிற உயிர்களிடத்திலும் அன்பு காட்டி, அவற்றின் துன்பத்தை போக்கும் தன்மையை குறிக்கிறது. உயிர்களைக் கொல்லாமை, பிறருக்குத் துன்பம் செய்யாமல் ஆகிய பண்புகளுடன் எல்லா உயிர்களையும் ஓம்பி காப்பதே அருளுடைமையாகும்.

ஆபுத்திரனின் கருணை உள்ளம்

**அறம் எனப்படுவது யாதென கேட்பின்**
**மறவாது இது கேள், மண் உயிர்க்கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டது இல்.(காதை. 26, வரிகள் 228 முதல் 230 வரை)**

என்ற மணிமேகலை காப்பியத்தில் வரும் புகழ்பெற்ற வரிகள் யாவரும் அறிந்ததே. ஆபுத்திரன் என்ற கதாபாத்திரத்தின் வழியே சாத்தனார் அருமையான அறச்சிந்தனையை விளக்கி உள்ளார். இதில் சிந்தாதேவி விளக்கு அவன் முன் தோன்றி, "நாட்டின் வளம் குன்றினாலும், இந்த ஓடுவறம் குன்றாது" என்று கூறி ,அமுதசுரபி என்ற பாத்திரத்தின் மூலம் உணவு எடுக்கலாம் என அருள் பாலித்தாள்,

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

அவனும் வறுமையில் வாடும் அதாவது கண் தெரியாதவர்கள், காது கேட்காதவர்கள், கால் ஊனமுற்றவர்கள், அனாதைகள், நோயாளிகள் அனைவரும் வாருங்கள் என்று அழைத்து அவர்களுக்கு உணவளித்து பாதுகாத்து வந்தான்..

இந்திரனின் சூழ்ச்சியால் அமுதசுரபியின் பயன் நீடிக்கவில்லை. ஆபுத்திரன் சாவக நாட்டை நோக்கி பயணப்பட்டான். இடையில் மணி பல்லவ தீவில் இறங்கினான். தீவில் யாரும் இல்லாத சூழலில், ஆபுத்திரன் இறக்கும்போது தன்னை பிள்ளை பருவத்திலே பாலூட்டி பாதுகாத்த பசுவை எண்ணிக் கொண்டே உயிர் விட்டான். இதன் வாயிலாக உயிர்களின் மீது கொண்ட பேரன்பு வெளிப்படுகிறது.

**நபிகள் நாயகத்தின் கருணை உள்ளம்**

நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை கூறும் நூலான சீறாப்புராணத்தில், மானுக்குப் பிணை நின்ற படலத்தில், வேடனிடம் சிக்கிய ஒரு பெண் மானுக்காக தாமே பிணையாக நின்று அம்மானை அவனிடமிருந்து மீட்ட பெருங்கருணையைப் பாடியிருப்பார்.

**மானுாரை வழங்கக் கேட்டு மனத்தினிற் கருணை பொங்கிக்**
**கானவேட்டுவனை நோக்கிக் கன்னியை வருத்தந் தீர்த்துக்**
**தான்வருமளவு மியானே பிணையெனச் சாற்றி நின்றார்**
**தீனெனும் பயிரைக் காத்தும் செழும்புகழ் விளைக்குஞ் செம்மல்**
**(மானுக்குப் பிணை நின்ற படலம்: 851)**

நபி வருவதை கண்ட மானானது, இறைவனது தூதர் வந்துவிட்டார் என்று தன்னுடைய துன்ப நிலையைக் கூறியது. அதனைக் கேட்ட நபி, இந்தமான் தனது கன்றின் துயர்தீர்த்து வரும் வரை நான் இதற்கு பிணை. எனவே இதனை விடுக என்றார். என்னை பிணையாகக் கொண்ட இந்த பெண் மான் ஒரு நாழிகைப்போதில் வராவிட்டால் நான் உனது பசியை தீர்ப்பதற்காக ஒன்றிற்கு இரண்டாக அன்புடன் தருவேன் கவலைப்படாதே என்று உரைத்தார்.

இந்நிகழ்வானது நபிகள் நாயகத்தின் இரக்கத்தையும் விலங்குகளை நேசிக்கும் பண்பையும் வெளிப்படுத்துகிறது.

**பாரியின் அருள் உள்ளம்**

ஒருநாள் தேர் ஏறி சென்ற பாரி வழியில் தழைத்து வளர்ந்த முல்லைக்கொடி ஒன்று படர்வதற்கு உரிய கொழுக்கொம்பின்றி, காற்றால் அலைப்புண்டு வருந்துவதைக் கண்டான். அந்தோ! இக்கொடி, நம்மைப் போல் பேசும் ஆற்றலை பெற்றுள்ளதாயின் தன் குறை கூறி அழும். ஆனால் அது செய்யாது வருந்துகிறது. எனினும், அதன் தேவை கண்ட நான் அதற்கு துணை செய்யாது போனால் தகுதி இல்லை என நினைத்து, ஏறி வந்த தேரை அதன் அருகே நிறுத்தி பற்றி படருமாறு விட்டு சென்றான். பாரியின் இவ்வருள் உள்ளத்தையும் கொடை சிறப்பையும் தமிழகம் முழுவதும் பாராட்டிற்று.

**“சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய ----------**

**பறம்பின் கோமான் பாரி. (சிறுபாணாற்றுப்படை 89-91)**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

என்ற வரிகள் மூலம் அறியலாம்.

**கும்பகர்ணனின் செஞ்சோற்று கடன்**

கம்பன், கும்பகர்ணனின் பாத்திரத்தை வெறும் அரக்கனாக காட்டாமல் வீரத்தனம், தர்ம சிந்தனை, பாச உணர்வு மற்றும் வீரத்தின் தியாகம் ஆகிய பல பரிமாணங்களை கொண்டதொரு உயர் குணம் படைத்த கதாபாத்திரமாக சித்தரிக்கிறார்.

செஞ்சோற்று கடனுக்காக அதாவது அண்ணன் மீது உள்ள பாசத்திற்காக கும்பகர்ணன் உயிர் விட்டான் என்று கம்பர் குறிப்பிடுகிறார். இது அவனது வீரத்தையும் தியாகத்தையும் பறைசாற்றுகிறது.

**"நீர்க்கோல வாழ்வை நச்சி,**

**நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்**

**போர்க்கோலம் செய்து விட்டாற்கு**

**உயிர் கொடாது, அங்குப் போகேன்,**

**தார்க்கோல மேனி மைந்த!**

**என் துயர் தவிர்த்தி ஆகின்,**

**கார்க்கோல மேனியானைக் கூடிதி, கடிதின் ஏகி, (7426)**

இந்தப் பாடலின் வழியே வீடனனை நோக்கி கும்பகர்ணன் நீண்ட காலம் என்னை அருமையாக வளர்த்து இன்று போர்க்கோலம் செய்து போர்க்களத்திற்கு அனுப்பிய இராவணனுக்காக உயிரை விடாமல், நிலையற்ற வாழ்க்கையை விரும்பி ராமனிடம் சேரமாட்டேன் என்றான். வெறும் வீர உணர்வோடு மட்டும் போரிடாமல், தர்மத்திற்காகவும் சகோதரனுக்காகவும் போரிட்டு தன் உயிரை தியாகம் செய்ததோடு இறப்பதே உயர்ந்த வாழ்வு என நினைத்து போரிட்டு மரணம் அடைகிறான். கம்பன் காட்டும் கும்பகர்ணன் உயரிய பண்புகளைக் கொண்ட ஒரு காவிய மனிதனாக உயர்ந்து நிற்கிறான்.

இந்த செய்தியானது விவிலியத்தில் யோவான் எழுதின நற்செய்தி நூலில், இயேசு கிறிஸ்து சீடர்களுக்கு அறிவுரை கூறும்போது நான் உங்களில் அன்பாய் இருக்கிறது போல நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாய் இருக்க வேண்டும் என்பதே என்னுடைய கற்பனையாய் இருக்கிறது. மேலும் ஒருவன் தன் சினேகிதருக்காக தன் ஜீவனை கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒரு வருடத்திலும் இல்லை என்றார் யோவான் (15 :12 ,13)

**முடிவுரை**

அருளுடைமை எவ்வாறு தமிழர்களின் அறம் மற்றும் நீதி நெறிகளை பிரதிபலிக்கிறது என்பதை மீண்டும் வலியுறுத்துகிறது. இன்றைய காலத்திலும் எவ்வாறு பொருந்தும் என்றும், ஒருவன் எவ்வளவு அறிவாளியாகவும் அதிகாரம் படைத்தவனாக இருந்தாலும், மனிதநேயம் இல்லாமல் அவனால் எதையும் சாதிக்க முடியாது, உயர்ந்த ஒழுக்கம், பண்பாடு, அவலக்குரல் கேட்டால் துடித்து எழும் மனித நேயம் என அத்தனை நற்பண்புகளோடு உலகம் வியக்க வாழ்ந்து வழிகாட்டிய எம் முன்னோர்கள் ஈ, எறும்பு கூட துன்பம் விளைவிக்காது வாழ்ந்தவர்கள்.

ஆனால் இன்று பணம் ஒன்றையே வாழ்வில் குறிக்கோளாக கொண்டு மனசாட்சியை விற்று சுயநல நோக்கோடு கல்விக்கூடங்கள், மருத்துவமனைகள், வணிகங்கள்,அரசாங்கம் என அத்தனையும் சமுதாயத்தில் செயல்படுகின்றன.

உலகை அழிவிலிருந்து காப்பாற்றி முன்னோர்கள் எமக்கு அளித்த பொக்கிஷத்தை நம் எதிர்கால சந்ததிக்கு அவ்வாறே கையளிக்க வேண்டியது மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரது தார்மீக கடமையாக்கும். நாம் உலகில் வாழ்வது ஒருமுறை. அவ்வாழ்வானது பிறருக்கு பயனுடையதாக அமைந்தால் மட்டுமே வாழ்க்கை முழுமை அடைகிறது. வன்முறைகள் அற்ற அன்பும் அமைதியும் ஆனந்தமும் நிறைந்த வாழ்வுக்கு அடித்தளமாக நாமும் வாழ்ந்து சமுதாயத்தையும் வாழ வைப்போம்.

**பார்வை நூல்கள்**

[1.] உலகக் காப்பியங்கள், இரா காசிராசன். வெளியீடு: நீ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், அம்பத்தூர் சென்னை 600098.

[2.] சிலப்பதிகாரத் தமிழகம் மற்றும் மணிமேகலை காட்டும் மனித வாழ்வு, தமிழறிஞர் சாமி. சிதம்பரனார், வெளியீடு: வுனா பப்ளிகேஷன் சென்னை 05 பதிப்பு 2018.

[3.] திருக்குறள், நாமக்கல் கவிஞர் உரை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, மூன்றாம் பதிப்பு 1999.

[4.] சீறாப்புராணம் மூலமும் உரையும், செய்கு தம்பி பாவலர், யுனிவர்சல் பப்ளிசர்ஸ் சென்னை.

[5.] கம்பராமாயணம் மூலம் முழுவதும், அறிஞர் சா. வே. சுப்பிரமணியன், மணிவாசகர் வெளியீடு, சென்னை. பதிப்பு 2018

[6.] சிறுபாணாற்றுப்படை, பேரா. பொன். புஷ்பராஜ், சாரதா பதிப்பகம்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)